செ.வெ.எண் : 17/ மே நாள் : 20.05.2021

## இராமநாதபுரம் மாவட்டம்

## இராமநாதபுரம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில்

## கூடுதல் ஆட்சியர்/மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.எம்.பிரதீப் குமார்,இ.ஆ.ப., அவர்கள்

## இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.கே.நவாஸ்கனி அவர்கள்

## இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.காதர்பாட்சா முத்துராமலிங்கம் அவர்கள் ஆகியோர் நேரில் ஆய்வு

இராமநாதபுரம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் இன்று (20.05.2021) கூடுதல் ஆட்சியர்/ மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.எம்.பிரதீப்குமார்,இ.ஆ.ப., அவர்கள், இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.கே.நவாஸ்கனி அவர்கள், இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.காதர்பாட்சா முத்துராமலிங்கம் அவர்கள் ஆகியோர், கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் குறித்து நேரில் ஆய்வு செய்து, மருத்துவர்களுடன் ஆலோசனை மேற்கொண்டார்கள்.

மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.இ.கார்த்திக்,இ.கா.ப. அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு.எம்.அல்லி, இராமநாதபுரம் சார் ஆட்சியர் டாக்டர்.என்.ஓ.சுகபுத்ரா,இ.ஆ.ப., முதன்மை மருத்துவர் திரு.மலையரசு உட்பட பலர் உடனிருந்தனர்.

தொடர்ந்து கூடுதல் ஆட்சியர்/மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.எம்.பிரதீப்குமார்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:

இராமநாதபுரம் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் பரவலை தடுப்பதற்கான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாவட்டத்தில் தற்போது 2584 நபர்கள் கொரோனா வைரஸ் தொற்றுக்கு சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில் 1837 பேர் அவர்களது சொந்த வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டு மருத்துவ சிகிச்சை மற்றும் ஆலோசனை வழங்கப்பட்டு வருகிறது. மாவட்டத்தில் இதுவரை மொத்தம் 84,340 நபர்களுக்கு கொரோனா தடுப்பூசி போடப்பட்டுள்ளது. கொரோனா தடுப்பு நடவடிக்கைகளில் மருத்துவர்கள், செவிலியர்கள் உள்ளிட்ட மருத்துவப் பணியாளர்கள் தொடர்ந்து அயராது பணியாற்றி வருகின்றனர். பலர் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டும் உள்ளனர். மாவட்டத்தில் கொரோனா தடுப்பு பணிகளில் ஈடுபடும் மருத்துவர்களின் எண்ணிக்கையை அதிகரித்திடும் நோக்கில் தற்காலிகமாக மருத்துவர்களை பணியமர்த்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என கூடுதல் ஆட்சியர்/மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் அவர்கள் தெரிவித்தார்.

இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.கே.நவாஸ்கனி அவர்கள் தெரிவித்ததாவது:

இராமநாதபுரம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மாவட்டத்தில் கொரோனா தொற்று உறுதி செய்யப்படும் பொதுமக்களுக்கு உரிய மருத்துவ சிகிச்சை வழங்கிட ஏதுவாக போதிய படுக்கைகள், ஆக்சிஜன் உட்பட உயிர் காக்கும் மருந்துகள் போதிய அளவு தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. சிகிச்சைக்காக வருவோர் நோய் பாதிப்பு முற்றிய நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் போது உயிரிழப்பு போன்ற வருந்தத்தக்க நிகழ்வுகள் ஏற்படுகின்றன. அறிகுறிகள் தென்படும் ஆரம்ப கட்டத்திலேயே மருத்துவமனையில் அனுமதி பெற்று உரிய சிகிச்சை பெறுவதன் மூலம் உயிரிழப்புகளை முற்றிலும் தவிர்த்திட முடியும் என இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**